அறிவித்தல்

நாட்டின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக, அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு 2026.11.20ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நேர்முகத் தேர்வுகள் மாத்திரம், தவிர்க்க முடியாத காரணத்தினால் கீழ்க்காணுமாறு பிற்போடப்படுகின்றன என்பதை இதன்மூலம் அறியத் தருகின்றேன்.

மாகாணம்	-	**புதிய திகதி**
மேல்	-	2026.11.29
வடக்கு	-	2026.11.28
வடமேல்	-	2026.11.29
மத்திய	-	2026.12.01
ஊவா	-	2026.11.26
தெற்கு	-	2026.11.28
கிழக்கு	-	2026.11.28
சபரகமுவ	-	2026.11.28
வடமத்திய	-	2026.11.26

மேலும், மேற்குறித்த மாகாணங்களில் 2026.11.21ஆம் திகதி முதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நேர்முகத் தேர்வுகள் முன்னர் திட்டமிட்டபடியே நடைபெறும்.

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, பாடசாலைகளுக்கான விருப்பத்தைத் தெரிவிப்பதற்காகத் தகவல்களை உள்ளீடு செய்யும் இணையவழி முறைமை தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது. அது 2026.11.19ஆம் திகதி முதல் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் "**Teacher Recruitment Application System**" என காட்சிப்படுத்தப்படும். முன்னர் அறிவிக்கப்பட்டவாறு, 2026.11.19ஆம் திகதியுடன் இந்த இணையவழி முறைமை இரத்துச் செய்யப்படமாட்டாது. இம்முறைமையில் பிரவேசிப்பதற்கு, விண்ணப்பதாரர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள திகதியன்று இரவு 8.00 மணி வரை சந்தர்ப்பம் உள்ளது.

நேர்முகத் தேர்வில் பங்குபற்றும் திகதி வரை உங்களுக்கு அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடின், இந்த இணையத்தளத்தில் 2026.10.30ஆம் திகதி காட்சிப்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியலில் உங்கள் பெயர் உள்ளடங்கியுள்ள பக்கத்தின் பிரதியுடனும், உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும், நீங்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள திகதியன்று காலையிலேயே நேர்முகத் தேர்வு வளாகத்தில் அமைந்துள்ள **Waiting Room** இற்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அங்கு இணையவழி முறைமையில் பிரவேசிப்பதற்குரிய அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு முற்பகல் 8.00 மணி முதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப இணையவழி முறைமையில் பிரவேசிப்பதுடன், நேர்முகத் தேர்விலும் தோற்ற முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விலும் செயன்முறைத் தேர்விலும் தோற்றிய பின்னர், அன்றைய தினமே இரவு 8.00 மணி வரை நேர்முகத் தேர்வு வளாகத்தில் அமைந்துள்ள **Waiting Room** இற்குச் சமூகமளித்து, பாடசாலைத் தெரிவுகளைக் குறிப்பிட்ட ஆவணங்களை அச்சிட்டுக் கையளிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றேன்.

இந்நடவடிக்கைகளினால் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்திற்காக வருந்துகின்றேன்.

நாலக களுவெவ
செயலாளர்